**அக்டோபர்: 05**

## ஆண்டவர் நமக்காக ஜெபித்த ஜெபம்.

**வாசிக்க: யோவான் 17:1-26**

இயேசு இவ்வாறு ஜெபித்தார், பிதாவே, நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர், நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள், நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும். நான் உலகத்தானனல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல. நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாக இருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.




ஹலோ குட்டீஸ், யோவான் 17 வது அதிகாரத்தில், நம்ம ஆண்டவர் நமக்காக செய்த பெரிய ஜெபத்தில் ஒரு பகுதியை மட்டும் தான் இங்கே நாம தியானிக்கிறோம். அவர் செய்த ஜெபத்தின் ஒவ்வொரு குறிப்பும் மிக முக்கியம். ஆனால் எல்லவற்றையும் தியானிக்க இடமும் நேரமும் போதாது. அவர் தம் சீஷருக்கு தானே ஜெபம் செய்தார் என்று நீங்க நினைக்கலாம். அதற்காக தான் இயேசப்பா தம் சீஷர்கள் மூலம் அவரை விசுவாசிக்கிறயாவருக்காகவும் என்று ஜெபித்தார். இந்த ஜெபத்தில் நான் மிக முக்கியமானதாக பார்த்தது ஒற்றுமை (அ) ஒருமனத்திற்காக நம்ம இயேசப்பா ஜெபித்ததேயாகும். அவருடைய பிள்ளைகளாக நாம் ஒற்றுமையாக இருந்தால் என்ன நடக்கும் என்று தெளிவாக (21-23 வசனத்தில்) ஜெபத்தில் கூறியுள்ளார்.

1) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை பிதா உலகத்திற்கு அனுப்பினார் என்பதை உலகம் விசுவாசிக்க நாம் ஒன்றாயிருக்கவேண்டும்.
2) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமை நம் நடுவில் வெளிபட நாம் ஒன்றாயிருக்க வேண்டும்.
3) பிதாவின் அன்பு கிறிஸ்துவுக்குள் இருந்து வெளிபட்டது போல உலகத்தில் நம் மூலமாக வெளிப்பட நாம் ஒன்றாயிருக்க வேண்டும்.

குட்டீஸ் நீங்களும் எப்போதும் ஒற்றுமையாக ஜெபிக்கலாமா...?

சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். எபேசியர் 4:3

## ஜெபம்

பரிசுத்தமுள்ள எங்கள் அன்பு தகப்பனே, நீர் திரித்துவ தேவனாக மூன்றில் ஒன்றாக இருப்பது போல கிறிஸ்துவின் சரீரமாக நாங்களும் ஒன்றாயிருக்க உங்க அன்பினால் இணைத்தருளும். இயேசு கிறிஸ்துவின் மகிமையான நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்.

